1983 பிப்ரவரி 2]

குடிசைப் பகுதிகளை மேம்படுத்தும் திட்டம்

* வினா எண் 112— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில், தீவிர குடிசைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் படி குடிநீர், தெருவிளக்கு போன்ற வசதிகளை செயல்படுத்தும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: சென்னையிலுள்ள குடிசைப் பகுதிகளை மேம்படுத்த, விரைவுபடுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டம், ஏற்கனவே, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மற்ற பகுதிகளில் இத்திட்டம் நகராட்சிகளால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால் தமிழ்நாட்டில் எத்தனை குடிசைகள் ஏற்படும். எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் இந்தத் திட்டம் செயல்பட இருக்கின்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைப் பொறுத்தமட்டில் சொல்லலாம். தமிழ்நாடு முழுவதும் சொல்லவேண்டுமானால் நிறைய இருக்கின்றது. அதற்கு நேரம் அதிகமாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தத் துணை வினாக்களுக்கான குறிப்பை அறிக்கையாக அவையிலே வைத்துவிடுங்கள்.

உசிலம்பட்டிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம்

* வினா எண் 113—திரு. எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த உசிலம்பட்டிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் எந்த அளவில் உள்ளது?

(ஆ) அத்திட்டம் எப்பொழுது முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த உசிலம்பட்டி பேரூராட்சியின் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் முன்னேற்றத்தில் உள்ளது.

(ஆ) இத் திட்டம் 1983 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(முற்பகல் 9-50)

திரு என். பழனிவேல்: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் உள்ள உசிலம்பட்டி குடிநீர் திட்டம் முன்னேற்றத்தில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் தற்போது எந்த அளவில் அது முன்னேற்றம் அடைந்துள்ளது? எந்த அளவிற்குப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன? இந்த 1983ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் முடித்துக்கொடுக்கப்படுமா, அந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தொகை எவ்வளவு? இதுபோன்று மதுரை மாவட்டத்தில் வேறு குடிநீர் திட்டங்கள் இப்போது செயல்பட்டு வருகிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரே துணை வினாவில் மாவட்ட முழுவதிலும் உள்ள திட்டங்கள் பற்றி கேள்விகள் கேட்பது சரியல்ல; ஒரு துணை வினாவில் பல கேள்விகள் கேட்பதும் சரியல்ல.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, உசிலம்பட்டி குடிநீர் திட்ட மதிப்பீடு ரூ. 56.75 லட்சமாகும். உத்தரவிட்ட தேதி 23-1-1980. வேலை ஆரம்பிக்கப்பட்ட தேதி மார்ச் 1981. இப்போது வேலைகள் நடந்துகொண்டு இருக்கின்றன. தலைமைப் பணியிடத்தில் இருந்து 3 வடி கிணறு வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. 4 லட்சம் லிட்டர் வட்டக் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டுமானப் பணிகள், நீர் கொண்டு செல்லும் குழாய் பதிக்கும் பணி ஆகியவை முன்னேற்றத்தில் உள்ளன.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, உசிலம்பட்டி போன்ற திட்டங்களுக்கு தண்ணீர் கொண்டு போகும் போது 2-3 கிலோமீட்டர் தூரம் தண்ணீர் கொண்டு செல்கிறபோது, வழியில் உள்ள கிராமங்களுக்கும் இந்தத் திட்டத்தினால் தண்ணீர் கொடுப்பதற்கு அரசு திட்டம் வைத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திலே கூட 16 வழியோர கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்கப்படும்.

காட்பாடி தொகுதியிலுள்ள இராஜா தோப்பில் அணை கட்டும் திட்டம்.

*வினா எண் 114—திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்பாடி தொகுதி கே. வி. குப்பம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள இராஜாதோப்பில் அணை கட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் உத்தேச மதிப்பீடு எவ்வளவு?

(இ) வேலை எப்போது துவங்கும்?